**இலங்கை கணக்கீட்டுத் தொழில்நுட்பவியலாளர் கழகம்**

# பாடத்திட்டம் 2020

## மட்டம் II

## 201 – உயர் நிதிக் கணக்கீடும் கிரயவியலும் (AFC)

கல்வி மற்றும் பயிற்சிப் பிரிவின் வெளியீடு

## இலங்கை கணக்கீட்டுத் தொழில்நுட்பவியலாளர் கழகம்

## 201 – உயர் நிதிக் கணக்கீடும் கிரயவியலும் (AFC)

**பரீட்சார்த்திகளுக்கான அறிவுறுத்தல்கள் (தயவுசெய்து கவனமாக வாசிக்கவும்)**

**அனுமதிக்கப்பட்ட காலம்:**

வாசிப்புக்கு : 15 நிமிடங்கள்
விடையெழுத : 03 மணித்தியாலங்கள்

**வினாத்தாள் கட்டமைப்பு:**

- இவ்வினாத்தாள் மூன்று பகுதிகளைக் கொண்டது. பகுதி A, பகுதி B, பகுதி C.
- பகுதி A, பகுதி B, பகுதி C ஆகியவற்றிலுள்ள சகல வினாக்களுக்கும் விடையளித்தல் வேண்டும்.

**புள்ளிகள்:**

- ஒவ்வொரு பகுதிக்குமான புள்ளிகளின் ஒதுக்கீடு:

| **பகுதி** | **புள்ளிகள்** |
|---|---|
| பகுதி A | 25 |
| பகுதி B | 50 |
| பகுதி C | 25 |
| **மொத்தம்** | **100** |

- ஒவ்வொரு வினாவுக்குமான புள்ளிகள் உரிய வினாவுடன் காட்டப்பட்டுள்ளன.
- இவ்வினாத்தாளுக்கான சித்திப் புள்ளி 50 % ஆகும்.

**விடைகள்:**

- சகல விடைகளும் தரப்பட்ட விடைப்புத்தகத்திலேயே எழுதப்பட வேண்டும். வினாத்தாளில் எழுதப்படும் விடைகள் புள்ளியிடலுக்காகக் கருத்திற் கொள்ளப்பட மாட்டாது.
- ஒவ்வொரு வினாவுக்குமான விடைகளை ஒரு புதிய பக்கத்தில் எழுத ஆரம்பிக்கவும்.
- சகல செய்முறைகளும் தெளிவாகக் காட்டப்பட வேண்டும்.
- தாளின் ஓரங்களினுள் எழுதலாகாது.

**விடைப் புத்தகங்கள்:**

- ஒவ்வொரு விடைப் புத்தகத்தினதும் முகப்புப் பக்கத்தில் அறிவுறுத்தல்கள் காட்டப்பட்டுள்ளன.

**கணிப்பான்கள்:**

- குறியீட்டு அட்சரகணிதம் மற்றும் வகையீட்டு வசதிகளைக் கொண்ட கணிப்பான்கள் தவிர்ந்த வேறு கணிப்பான்களைப் பயன்படுத்த முடியும். நிரற்படுத்தக்கூடிய கணிப்பான்களின் பாவனை அனுமதிக்கப்பட மாட்டாது.

**இணைப்புகள்:**

- செயல் வினைச்சொல் – ஒவ்வொரு வினாவும் ஒரு செயல் வினைச் சொல்லைக் கொண்டிருக்கும் (நோக்கச் சோதனை வினாக்கள் தவிர்ந்த). பரீட்சார்த்திகள் செயல் வினைச்சொல் நிரலில் தரப்பட்ட வினைச்சொல் வரைவிலக்கணத்தை அடிப்படையாகக் கொண்டு வினாக்களுக்கு விடையளித்தல் வேண்டும்.

**நோக்கச் சோதனை வினாக்கள் (OTQs)**
12 கட்டாய வினாக்கள்
(மொத்தம் 25 புள்ளிகள்)

**பகுதி A**

***வினா 01***

**இல. 1.1 தொடக்கம் 1.5 வரையான வினாக்களுக்கு மிகச் சரியான விடையினைத் தெரிவுசெய்து, தெரிவுசெய்த விடையினை உமது விடைப்புத்தகத்தில் வினா இலக்கத்தை எழுதி அதன் எதிரே எழுதுக.**

**1.1** நிதிக் கூற்றுக்களின் கூறுகளை மதிப்பீடு செய்வதற்குப் பின்வருவனவற்றுள் பயன்படுத்தப்பட முடியாதது எது?

(1) தேறத்தக்க பெறுமதி
(2) முன்கொணரற் பெறுமதி
(3) இற்றைப் பெறுமதி
(4) வரலாற்றுப் பெறுமதி ***(02 புள்ளிகள்)***

**1.2** **வரையறுக்கப்பட்ட டொட்கொம் (தனியார்)** நிறுவனமானது 2020 மார்ச் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்காகச் செலுத்திய வருமான வரி ரூபா 151,000 ஆகும். 2019 மார்ச் 31 மற்றும் 2020 மார்ச் 31 ஆகிய திகதிகளில் வருமான வரி ஏற்பாடுகள் முறையே ரூபா 37,000 மற்றும் ரூபா 43,000 ஆகும். முன்னைய ஆண்டுகளில் எவ்வித மேலதிக அல்லது குறையான ஏற்பாடுகளும் காணப்படவில்லை எனின், 2020 மார்ச் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான வருமான வரிச் செலவினமாக அமைவது

(1) ரூபா 194,000
(2) ரூபா 43,000
(3) ரூபா 71,000
(4) ரூபா 157,000 ***(02 புள்ளிகள்)***

**1.3** **FAST PACK கம்பனியானது** கண்ணாடிப் போத்தல்கள் தயாரிப்பில் ஈடுபடுகிறது. பின்வரும் தகவல்களானவை கண்ணாடிப் போத்தல்களைத் தயாரிப்பதற்குப் பயன்படுத்தப்படும் மூலப் பொருளொன்றுடன் தொடர்புடையவையாகும்.

- வருடாந்தக் கேள்வி 30,625
- உருப்படியொன்றுக்கான வைத்திருத்தல் கிரயம் ரூபா 2.00
- கட்டளையொன்றுக்கான கட்டளைக் கிரயம் ரூபா 1.00

சிக்கனக் கட்டளைக் கணியம் (EOQ) :

(1) 600 அலகுகள்
(2) 248 அலகுகள்
(3) 175 அலகுகள்
(4) 425 அலகுகள் ***(02 புள்ளிகள்)***

**1.4** பின்வருவனவற்றுள் செம்மையாக்கம் செய்யப்படாத நிகழ்வொன்றிற்கான ஓர் உதாரணமாக அமைவது எது?

(1) அறிக்கையிடல் காலப்பகுதிக்குப் பின்னர் பிரகடனப்படுத்திய பங்கிலாபம்
(2) அறிக்கையிடற் காலப்பகுதியில் தவறான நடத்தையொன்றிற்காக நீதிமன்றினால் விதிக்கப்பட்ட தண்டப்பணம்
(3) அறிக்கையிடற் காலப்பகுதிக்குப் பின்னர் தொழிற்சாலைக் கட்டடத்திற்கு ஏற்பட்ட பாரியளவிலான சேதம்
(4) அறிக்கையிடற் காலப்பகுதிக்குப் பின்னர் வெள்ளம் காரணமாக வியாபார இருப்புக்கு ஏற்பட்ட பாரியளவிலான சேதம் ***(02 புள்ளிகள்)***

**1.5** பின்வருவனவற்றுள் ஒருங்கிணைந்த கணக்கீட்டு முறைமையின் ஓர் அனுகூலமாக **அமையாதது** எது?

(1) வேலைகளில் இரட்டிப்பு தன்மை (duplication) இன்மை
(2) எழுதுநர் கிரயத்தை குறைக்க முடியும்.
(3) கிரயக் கணக்கு மற்றும் நிதிக் கணக்கிற்கிடையில் இலாப இணக்கம் காணப்படல்
(4) கணக்கீட்டுத் தொழிற்பாடுகளைக் கூடிய பயனுறுதிமிக்க விதத்தில் கட்டுப்படுத்தப்படல்
***(02 புள்ளிகள்)***

**இல. 1.6 முதல் 1.12 வரையான வினாக்களுக்கு உரிய விடைகளை விடைப்புத்தகத்தில் உரிய வினா இலக்கத்தை எழுதி அதன் எதிரே எழுதுக.**

**1.6** கிரயக் கணக்கீட்டிற்கும் நிதிக் கணக்கீட்டிற்குமிடையிலான வேறுபாடுகள் இரண்டினைக் (02) குறிப்பிடுக. ***(02 புள்ளிகள்)***

**1.7** பொருள் கட்டுப்பாட்டின் நோக்கங்கள் இரண்டினைக் (02) கூறுக. ***(02 புள்ளிகள்)***

**1.8** நேர வீத முறைமையின் பிரதிகூலங்கள் இரண்டினை (02) பட்டியலிடுக. ***(02 புள்ளிகள்)***

**1.9** 1890 ஆம் ஆண்டின் பங்குடமை கட்டளைச் சட்டத்திற்கிணங்க, கீழே தரப்பட்ட ஒவ்வொன்றிற்குமான ஏற்பாடுகளைக் கூறுக.

(a) வியாபாரத்திற்கு புதிய பங்காளர் ஒருவரை அறிமுகஞ் செய்தல்

(b) வியாபாரத்தின் தன்மையினை மாற்றம் செய்தல் ***(02 புள்ளிகள்)***

**1.10** உரிய நேர முறைமை (JIT) யின் நன்மைகள் இரண்டினைக் (02) குறிப்பிடுக. ***(02 புள்ளிகள்)***

**1.11** ABC பங்குடமையின் பங்காளர்களான A, B, C ஆகியோர் இலாப மற்றும் நட்டங்களை முறையே 5:3:2 என்ற விகிதத்தில் பகிர்கின்றனர். C ஆனவர் 2019 டிசெம்பர் 31 தொடக்கம் பங்குடமையிலிருந்து இளைப்பாறத் தீர்மானித்ததுடன் A மற்றும் B ஆகியோர் இலாப, நட்டங்களை 3:2 என்ற விகிதத்தில் பகிர்ந்துகொண்டு பங்குடமையைத் தொடரத் தீர்மானித்தனர்.

2019 டிசெம்பர் 31 இல் பின்வரும் சொத்துக்கள் கீழே காட்டப்பட்டவாறு மீள்மதிப்பீடு செய்யப்பட்டன :

| | 2019 டிசெம்பர் 31 இல் முன்கொணரற் பெறுமதி | 2019 டிசெம்பர் 31 இல் மீள்மதிப்பீட்டுப் பெறுமதி |
|---|---|---|
| காணியும் கட்டடமும் | 24,000 | 30,000 |
| மோட்டார் வாகனங்கள் | 2,400 | 2,000 |

கணக்கேடுகளில் சொத்துக்கள் மீள்மதிப்பீட்டுப் பெறுமதியில் முன்கொணரப்பட்டன.

சொத்துக்களின் மீள்மதிப்பீட்டிற்கான நாட்குறிப்பேட்டுப் பதிவுகளைத் தயாரிக்குக. ***(02 புள்ளிகள்)***

**1.12** உற்பத்தி நிறுவனமான **வரையறுக்கப்பட்ட XYZ கம்பனியானது** ஓர் ஒருங்கிணைக்கப்படாத கணக்கீட்டு முறைமையைப் பயன்படுத்துகிறது. 2019 டிசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக் கணக்குகளில் காட்டப்பட்ட இலாபம் ரூபா 632,325 ஆகும். ஆயினும் கிரயக் கணக்குகளில் வேறுபட்ட இலாபம் காட்டப்பட்டது.

வேறுபாட்டிற்கான காரணங்களாக பின்வருவன கண்டறியப்பட்டன.

இருப்பு மதிப்பீடு

(1)

| | கிரயக் கணக்கு | நிதிக் கணக்கு |
|---|---|---|
| ஆரம்ப இருப்பு | 423,000 | 375,000 |
| இறுதி இருப்பு | 685,000 | 725,000 |

(2) பணிப்பாளர் கட்டணமான ரூபா 250,000 நிதிக் கணக்குகளில் மாத்திரம் தாக்கல் செய்யப்பட்டிருந்தமை

கிரயக் கணக்கீட்டின் பிரகாரம் 2019 டிசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான இலாபத்தினைக் **கணிக்குக.** ***(03 புள்ளிகள்)***

***(மொத்தம் 25 புள்ளிகள்)***

***பகுதி A முடிவு***

**ஐந்து (05) கட்டாய வினாக்கள்**
(மொத்தம் 50 புள்ளிகள்)

**பகுதி B**

***வினா 02***

(A) **ஜாவா கம்பனியானது** ஒரு வணிகக் கம்பனியாக இருப்பதுடன் அக்கம்பனியின் 2019 டிசெம்பர் மாதத்தில் மேற்கொள்ளப்பட்ட ஓர் உருப்படி தொடர்பான கொடுக்கல் வாங்கல்கள் கீழ்வருமாறு:

| **திகதி** | **விபரம்** | **கணியம் (அலகு)** | **அலகு விலை (ரூபா '000)** |
|---|---|---|---|
| 01/12/2019 | ஆரம்ப இருப்பு | 100 | 20 |
| 03/12/2019 | கொள்வனவு | 250 | 30 |
| 05/12/2019 | கொள்வனவு | 200 | 32 |
| 10/12/2019 | வழங்கல் | 150 | - |
| 15/12/2019 | வழங்கல் | 200 | - |
| 21/12/2019 | கொள்வனவு | 300 | 28 |
| 25/12/2019 | கொள்வனவு | 250 | 24 |
| 30/12/2019 | வழங்கல் | 450 | - |

இந்தக் கம்பனி WAC முறையைப் பயன்படுத்தி இருப்புப் பேரேட்டினைத் தயாரிக்கின்றது.

**நீங்கள் செய்ய வேண்டியவை:**

பின்வருவனவற்றைத் **தயாரிக்குக:**

**(a)** இறுதி இருப்பின் பெறுமதி ***(03 புள்ளிகள்)***

**(b)** விற்பனைக் கிரயம் ***(02 புள்ளிகள்)***

(B) **தறுசி செங்கல் செயன்முறைக் கம்பனியின்** செங்கல் செயன்முறைப் பிரிவில் நான்கு ஊழியர்கள் இருப்பதுடன் அவர்கள் பற்றிய 2019 ஆகஸ்ட் மாதத்திற்கான தகவல்கள் கீழ்வருமாறு:

| **பெயர்** | **கூலி வீதம் மணித்தியாலத்திற்கு** | **மாதத்தில் வேலை செய்த மணித்தியாலம்** |
|---|---|---|
| நிமல் | ரூபா 16 | 160 |
| நந்தசேன | ரூபா 10 | 80 |
| அமரசிங்க | ரூபா 8 | 196 |
| அமல் (மேற்பார்வையாளர்) | ரூபா 3,200 | 160 |

கீழ்வரும் மேலதிகத் தகவல்களும் தரப்பட்டுள்ளன:

1. சாதாரண வேலை மாதம் 160 மணித்தியாலங்கள் ஆகும். மேலதிக நேரமானது மணித்தியால கூலி வீதத்தில் 150% இல் கணிப்பிடப்படுகிறது.
2. ஊழியர் சேம நிதியத்திற்கான தொழில்தருநரினதும் ஊழியரதும் பங்களிப்புகள் முறையே அடிப்படைச் சம்பளத்தில் 15 % மற்றும் 10 % ஆகும். ஊழியர் நம்பிக்கை நிதியத்திற்கான பங்களிப்பு அடிப்படைச் சம்பளத்தில் 3 % ஆகும்.
3. சகல ஊழியர்களுக்கும் வாழ்க்கைச் செலவுப் படியாக மாதமொன்றிற்கு ரூபா 4000 செலுத்தப்படுவதுடன் மேற்பார்வையாளரின் போக்குவரத்துப் படியாக ஆண்டொன்றிற்கு ரூபா 120,000 செலுத்தப்படுகிறது.
4. ஊழியர் சேமநல சங்கத்தின் வருடாந்த அங்கத்துவக் கட்டணமானது அங்கத்தவர் ஒருவருக்கு ரூபா 6,000 ஆகும்.

**நீங்கள் செய்ய வேண்டியது:**

2019 ஆகஸ்ட் மாதத்திற்கான சம்பளப் பட்டியலைத் (payroll) **தயாரிக்குக.** ***(05 புள்ளிகள்)***

***(மொத்தம் 10 புள்ளிகள்)***

## *வினா 03*

**வரையறுக்கப்பட்ட மியுறு கம்பனியானது** ஒரு பிஸ்கட் உற்பத்திக் கம்பனியாகும். இக்கம்பனி, செயன்முறை மற்றும் பொதியிடல் எனும் இரு உற்பத்திப் பிரிவுகளையும் களஞ்சியம் எனும் ஒரு சேவைப் பிரிவையும் கொண்டுள்ளது.

பின்வரும் மதிப்பீட்டுத் தகவல்களானவை அடுத்த ஆண்டுடன் தொடர்புடையவை:

- கட்டடக் காப்புறுதி – ரூபா 1,250,000
- இயந்திரத் தேய்மானம் – ரூபா 960,000
- கட்டடத் தேய்மானம் – ரூபா 1,080,000

| விபரம் | செயன்முறை | பொதியிடல் | களஞ்சியம் | மொத்தம் |
|---|---|---|---|---|
| நேரில் பொருள் (ரூபா) | 500,000 | 350,000 | - | 850,000 |
| நேரில் கூலி (ரூபா) | 450,000 | 250,000 | 170,000 | 870,000 |
| இயந்திரம் (பெறுமதி) (ரூபா) | 8,000,000 | 4,000,000 | - | 12,000,000 |
| கட்டடம் (பெறுமதி) (ரூபா) | 25,000,000 | 15,000,000 | 10,000,000 | 50,000,000 |
| பொருள் கோரிக்கை எண்ணிக்கை | 2,000 | 1,000 | - | 3,000 |
| இயந்திர மணித்தியாலம் | 63,300 | 17,500 | - | 80,800 |

- செயன்முறைப் பிரிவின் மேந்தலைகளானவை இயந்திர மணித்தியாலத்தின் அடிப்படையில் உறிஞ்சப்படுகின்றன

**நீங்கள் செய்ய வேண்டியவை :**

**(a)** மேந்தலைகள் எவ்வாறு ஒதுக்கப்பட்டு ஒவ்வொரு உற்பத்தித் திணைக்களத்திற்கும் பகிரப்படுகிறது என்பதைக் காட்டும் கூற்றினைத் **தயாரிக்குக.** ***(08 புள்ளிகள்)***

**(b)** செயன்முறைப் பிரிவின் எஅலகொன்றுக்கான உற்பத்தி மேந்தலை உறிஞ்சல் வீதத்தினைக் **கணிக்குக.**

***(02 புள்ளிகள்)***

***(மொத்தம் 10 புள்ளிகள்)***

## *வினா 04*

**கங்கா, நாதி, யமுனா** ஆகியோர் 2005 இல் உருவாக்கப்பட்ட பங்குடமையின் பங்காளர்களாவர். பங்குடமை உடன்படிக்கையானது பின்வரும் விடயங்களை வழங்குகிறது.

- **கங்கா, நாதி** மற்றும் **யமுனா** ஆகியோர் இலாப, நட்டங்களை முறையே 3:2:1 எனும் விகிதத்தில் பகிருகின்றனர்.
- பங்காளர்கள் ஆரம்ப மூலதனக் கணக்கு மீதியில் ஆண்டிற்கு 10 % வட்டி பெற உரித்துடையவர்கள்.
- **கங்கா**வும் **நாதி**யும் முறையே ரூபா 10,000 மற்றும் ரூபா 15,000 எனும் தொகைகளை மாதச் சம்பளமாகப் பெற உரித்துடையவர்கள்.

பின்வரும் பரீட்சை மீதியானது 2019 மார்ச் 31 இல் வியாபாரத்திலிருந்து பிரித்தெடுக்கப்பட்டதாகும்:

ரூபா 000'

| | **வரவு** | **செலவு** |
|---|---|---|
| ஆதனம், பொறி மற்றும் உபகரணம் - கிரயத்தில் | 3,700 | |
| திரள் தேய்மானம் | | 420 |
| விற்பனைக் கிரயம் | 2,985 | |
| 2018 ஏப்ரல் 01 இல் மூலதனக் கணக்கு மீதி | | |
| - கங்கா | | 1,500 |
| - நாதி | | 1,000 |
| - யமுனா | | 500 |
| 2018 ஏப்ரல் 01 இல் நடைமுறைக் கணக்கு மீதி | | |
| - கங்கா | | 300 |
| - நாதி | 100 | |
| - யமுனா | | 285 |
| விற்பனை | | 6,800 |
| நிருவாகச் செலவினம் | 470 | |
| விநியோகச் செலவினம் | 1,800 | |
| நிதிச் செலவினம் | 225 | |
| எடுப்பனவுகள் - கங்கா | 120 | |
| - நாதி | 125 | |
| - யமுனா | 60 | |
| கையிலுள்ள காசும் வங்கியிலுள்ள காசும் | 1,220 | |
| | 10,805 | 10,805 |

2019 மார்ச் 31 இல் யமுனா பங்குடமையிலிருந்து இளைப்பாறத் தீர்மானித்தார். 2019 மார்ச் 31 இல் மதிப்பிடப்பட்ட பங்குடமையின் நன்மதிப்பு ரூபா 1,800,000 ஆக மதிப்பிடப்பட்டதுடன் இது தனியான நன்மதிப்புக் கணக்கின் ஊடாகக் காட்டப்படாது பங்காளர் மூலதனக் கணக்கின் ஊடாகச் செம்மையாக்கம் செய்யப்பட வேண்டும்.

கங்காவும் நாதியும் இலாப, நட்டங்களைச் சமனாகப் பகிர்ந்துகொண்டு பங்குடமையைத் தொடரத் தீர்மானித்தனர். இளைப்பாறலின் பின்னர் யமுனாவிற்குச் செலுத்த வேண்டிய முழுத் தொகையையும் கடன் கணக்கொன்றிற்கு மாற்றத் தீர்மானிக்கப்பட்டது.

**நீங்கள் செய்ய வேண்டியவை :**

2019 மார்ச் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான பின்வருவனவற்றைத் **தயாரிக்குக**.

(a) பங்குடமையின் இலாபம் மற்றும் நட்டப் பகிர்வுக் கணக்கு ***(03 புள்ளிகள்)***

(b) மூலதனக் கணக்குகள் ***(03 புள்ளிகள்)***

(c) நடைமுறைக் கணக்குகள் ***(04 புள்ளிகள்)***

***(மொத்தம் 10 புள்ளிகள்)***

## *வினா 05*

**ஸ்பைசி விளையாட்டுக் கழகமானது** 2000 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டது. 2019 சனவரி 01 ஆம் திகதியிலான அங்கத்தவர்களின் எண்ணிக்கை 50 ஆக இருப்பதுடன் அங்கத்தவர் ஒருவருக்கான வருடாந்த அங்கத்துவக் கட்டணம் ரூபா 20,000 ஆகும்.

1. ஆண்டின்போது பெறப்பட்ட அங்கத்துவக் கட்டணம் தொடர்பான விபரங்கள் பின்வருமாறு:
   - 2018 ஆம் ஆண்டிற்காக 10 அங்கத்தவர்கள் அங்கத்துவக் கட்டணத்தைச் செலுத்தினர்.
   - இந்த ஆண்டிற்காக 45 அங்கத்தவர்கள் அங்கத்துவக் கட்டணத்தைச் செலுத்தினர்.
   - அடுத்த ஆண்டிற்காக 05 அங்கத்தவர்கள் அங்கத்துவக் கட்டணத்தைச் செலுத்தினர்.
2. 2019 சனவரி 01 இல் 15 அங்கத்தவர்கள் 2018 ஆம் ஆண்டிற்கான அங்கத்துவக் கட்டணத்தைச் செலுத்தாதிருந்ததுடன் 5 அங்கத்தவர்கள் 2019 ஆம் ஆண்டிற்கான அங்கத்துவக் கட்டணத்தைச் செலுத்தியிருந்தனர்.
3. ஏனைய சொத்து மற்றும் பரிப்பு கீழ்வருமாறு:

(ரூபா 000’)

| | 2019 சனவரி 01 இல் | 2019 டிசெம்பர் 31 இல் |
|---|---|---|
| விளையாட்டு உபகரணம் - முன்கொணரற் பெறுமதியில் | 8,500 | 9,000 |
| காணியும் கட்டடமும் | 2,400 | 2,000 |
| அட்டுறு மின்சாரம் | 400 | 200 |

பின்வரும் கொடுப்பனவுகள் ஆண்டின்போது மேற்கொள்ளப்பட்டன:

| | ரூபா 000’ |
|---|---|
| விளையாட்டு உபகரணம் | 1,800 |
| மின்சாரம் | 600 |
| அச்சிடல் மற்றும் காகிதாதி | 200 |
| மைதானப் பராமரிப்பு | 150 |
| சம்பளங்கள் | 750 |
| விளம்பரப்படுத்தல் | 100 |

4. ஆண்டின்போது பெறப்பட்ட நன்கொடை ரூபா 2,750,000

5. 2019 சனவரி 01 இலான காசு மீதி ரூபா 175,000

**நீங்கள் செய்ய வேண்டியவை :**

2019 டிசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்காகப் பின்வருவனவற்றைத் **தயாரிக்குக.**

(a) அங்கத்துவச் சாந்தாக் கணக்கு ***(03 புள்ளிகள்)***

(b) கொள்ளல் மற்றும் கொடுத்தல் கணக்கு ***(03 புள்ளிகள்)***

(c) வருமான மற்றும் செலவினக் கணக்கு ***(04 புள்ளிகள்)***

***( மொத்தம் 10 புள்ளிகள்)***

## *வினா 06*

**மரியோ** 2019 அக்டோபர் 01 இல் ரூபா 1,000,000 முதலீடு செய்து தனியுடமை வியாபாரமொன்றை ஆரம்பித்தார். ஆனாலும் அவர் உரிய கணக்கேடுகளைப் பேணவில்லை.

(1) 2019 டிசெம்பர் 31 இல் முடிவடைந்த காலப்பகுதிக்கான அவரது வியாபாரத்தின் வங்கிக் கூற்றுக்களில் இருந்து பின்வரும் தகவல்கள் பிரித்தெடுக்கப்பட்டன:

| | | ரூபா |
|---|---|---|
| பெறுவனவு | முதலீடு | 1,000,000 |
| | விற்பனை | 2,400,000 |
| | கடன் | 750,000 |
| கொடுப்பனவு | வழங்குநர்கள் | 1,200,000 |
| | வாடகை (மாதாந்தம் ரூபா 25,000) | 300,000 |
| | மின்சாரமும் தொலைபேசியும் | 190,000 |
| | சம்பளங்கள் | 650,000 |
| | 2019 நவெம்பர் 30 இல் கொள்வனவு செய்யப்பட்ட மோட்டார் வாகனம் | 1,200,000 |

(2) சகல விற்பனைகளும் காசு அடிப்படையில் மேற்கொள்ளப்பட்டதுடன் 2019 அக்டோபர் மாதத்திலிருந்து ஒவ்வொரு மாத விற்பனை சேகரிப்பிலிருந்தும் அவை வங்கியில் இடப்பட முன்னர் மரியோ ரூபா 10,000 எடுத்துக் கொள்கிறார்.

(3) 2019 டிசெம்பர் 31 இலான வியாபாரச் சென்மதிகள் மற்றும் அட்டுறு மின்சாரம் முறையே ரூபா 275,000 மற்றும் ரூபா 7,500 ஆகும்.

(4) 2019 டிசெம்பர் 31 இலான இருப்புகள் ரூபா 425,000.

(5) மோட்டார் வாகனங்கள் நேர்கோட்டு அடிப்படையில் ஆண்டிற்கு 20% இல் தேய்மானம் செய்யப்படுகின்றன.

(6) ஆண்டிற்குப் 12 % வட்டி அடிப்படையில் 2019 சனவரி 01 ஆந் திகதி வங்கிக் கடனொன்று பெற்றுக் கொள்ளப்பட்டதுடன் 2020 சனவரி 01 இல் முதலாவது தவணைக் கட்டணம் செலுத்தப்பட்டது.

(7) வங்கிக் கட்டணமான ரூபா 4,500 கணக்கேடுகளில் பதியப்பட்டிருக்கவில்லை.

**நீங்கள் செய்ய வேண்டியது :**

**மரியோ** வியாபாரத்தின் 2019 டிசெம்பர் 31 இல் முடிவடைந்த காலப்பகுதிக்கான முற்றடக்க வருமானக் கூற்றினைத் **தயாரிக்குக.** ***(10 புள்ளிகள்)***

***பகுதி B முடிவு***

**ஒரு (01) கட்டாய வினா**

(மொத்தம் 25 புள்ளிகள்)

**பகுதி C**

***வினா 07***

**வரையறுக்கப்பட்ட SITJ (தனியார்) நிறுவனமானது** ஒரு பொறுப்பு வரையறுக்கப்பட்ட கம்பனியாகும். இது செல்லிடப்பேசிகள் மற்றும் கணினிகளை விற்பனை செய்யும் வியாபாரத்தில் ஈடுபடுகிறது.

இக்கம்பனியின் 2019 மார்ச் 31 இலான பரீட்சை மீதி கீழ்வருமாறு:

ரூபா '000

| | **வரவு** | **செலவு** |
|---|---|---|
| ஆதனம், பொறி மற்றும் உபகரணம் - கிரயத்தில் | 22,000 | |
| 2018 ஏப்ரல் 01 இலான திரள் தேய்மானம் | | 6,500 |
| **2018 ஏப்ரல் 01 இலான இருப்பு** | | |
| கணினிகள் | 3,500 | |
| செல்லிடப்பேசிகள் | 1,200 | |
| **<u>விற்பனைகள்</u>** | | |
| கணினிகள் | | 25,375 |
| செல்லிடப்பேசிகள் | | 15,000 |
| **கொள்வனவுகள்** | | |
| கணினிகள் | 8,500 | |
| செல்லிடப்பேசிகள் | 6,000 | |
| வேறு வருமானம் | | 2,000 |
| அறவிடமுடியாக் கடன் | 160 | |
| 2018 ஏப்ரல் 01 இல் ஐயக் கடன் ஏற்பாடு | | 560 |
| வியாபார சென்மதிகள் | | 5,000 |
| வியாபார வருமதிகள் | 12,000 | |
| குறிப்பிடு மூலதனம் (1 000 000 சாதாரண பங்குகள்) | | 15,000 |
| 2018 ஏப்ரல் 01 இல் கைக்கொள் இலாபம் | | 5,000 |
| மின்சாரம் | 250 | |
| செலுத்திய வாடகை | 500 | |
| செலுத்திய வருமான வரி | 100 | |
| சம்பளங்களும் கூலிகளும் | 1,800 | |
| விற்பனைப் பணிசை | 450 | |
| விளம்பரப்படுத்தல் | 375 | |
| தொலைபேசிச் செலவுகள் | 250 | |
| 2019.03.01 இல் பெறப்பட்ட 12% வங்கிக் கடன் | | 4,000 |
| கையிலுள்ள காசும் வங்கி மீதியும் | 21,350 | |
| | <u>78,435</u> | <u>78,435</u> |

**பின்வரும் மேலதிக தகவல்களும் தரப்பட்டுள்ளன:**

1. 2019 மார்ச் 31 இலான இருப்பின் கிரயமும் நிகர தேறத்தக்க பெறுமதியும்:

| | கிரயம் (ரூபா) | நிகர தேறத்தக்க பெறுமதி (ரூபா) |
|---|---|---|
| கணினிகள் | 2 ,000, 000 | 2, 500,000 |
| செல்லிடப்பேசிகள் | 500,000 | 300,000 |

2. 2018 ஏப்ரல் 01 இலான ஆதனம், பொறி மற்றும் உபகரணங்கள் விபரம் கீழே தரப்பட்டுள்ளன:

ரூபா ‘000

| | கிரயம் | திரள் தேய்மானம் | முன்கொணரற் பெறுமதி |
|---|---|---|---|
| காணி | 9,000 | - | 9,000 |
| கட்டடம் | 6,000 | 4,000 | 2,000 |
| மோட்டார் வாகனங்கள் | 6,000 | 2,000 | 4,000 |
| அலுவலக உபகரணம் | 1,000 | 500 | 500 |
| | 22,000 | 6,500 | 15,500 |

- சகல ஆதனம், பொறி மற்றும் உபகரணங்களும் நேர்கோட்டு அடிப்படையில் வருடாந்தம் 10% இல் தேய்மானம் செய்யப்படுகிறது.
- மோட்டார் வாகனமொன்று 2019 சனவரி 01 இல் ரூபா 2,800,000 இற்கு விற்பனை செய்யப்பட்டது. இந்த வாகனமானது 2014 டிசெம்பர் 31 இல் ரூபா 3,500,000 இற்குக் கொள்வனவு செய்யப்பட்டது. விற்பனை மீதான பெறுவனவுகளானவை காசுக் கணக்கில் வரவுப் பதிவு செய்யப்பட்டதுடன் கணினி விற்பனைக் கணக்கில் செலவுப்பதிவு செய்யப்பட்டது. இந்தப் பதிவுகளைவிட வேறு எந்தப் பதிவுகளும் மேற்கொள்ளப்படவில்லை.

3. சகல கணினிகள் மற்றும் செல்லிடப்பேசிகள் விற்பனை மீதும் உத்தரவாதச் சான்றிதழுக்காக 5% செலவு செய்யப்பட்டது.
4. 2019 மார்ச் 31 இல் மீதமாகவுள்ள வியாபார வருமதிகள்மீது 5 % ஐயக்கடன் ஏற்பாட்டை மேற்கொள்வது கம்பனியின் கொள்கையாகும்.
5. 2019 மார்ச் மாதத்திற்கான மின்சாரக் கட்டணமான ரூபா 45 000 செலுத்தப்படவில்லை.
6. 2018 ஏப்ரல் 01 இல் கம்பனியானது வாடகை உடன்படிக்கை ஒன்றினுள் நுழைந்ததுடன் மாதாந்த வாடகை ரூபா 50,000 ஆகும்.
7. 2018/19 ஆம் வரிமதிப்பாண்டிற்கான வருமான வரியாக ரூபா 250 000 மதிப்பிடப்பட்டுள்ளது.
8. 2019 மார்ச் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கு சாதாரண பங்கொன்றிற்கு ரூபா 2.50 பங்கிலாபத்தைச் செலுத்த பணிப்பாளர் சபை 2019 ஏப்ரல் 15 இல் முன்மொழிவு செய்திருந்தது.
9. ஆண்டின்போது கம்பனியானது ரூபா 1,000,000 இனை பொது ஒதுக்கத்திற்கு மாற்றீடு செய்ததுடன் இது தொடர்பாக எந்தப் பதிவும் மேற்கொள்ளப்படவில்லை.
10. பணிப்பாளர் சபையானது நிதிக் கூற்றுக்களின் வழங்கலை 2019 மே 18 இல் அங்கீகரித்தது.

**நீங்கள் செய்ய வேண்டியவை:**
**பின்வருவனவற்றைத் தயாரிக்குக:**

(a) 2019 மார்ச் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான இலாப அல்லது நட்ட மற்றும் ஏனைய முற்றடக்க வருமானக் கூற்று ***(12 புள்ளிகள்)***

(b) 2019 மார்ச் 31 இல் நிதி நிலைக் கூற்று ***(13 புள்ளிகள்)***

***(மொத்தம் 25 புள்ளிகள்)***

***பகுதி C முடிவு***

# செயல் வினைச் சொலள் பட்டியல்

| ஆற்றல் மட்டம் | விபரம் | செயல் வினைச்சொல் | வினைச்சொல் வரைவிலக்கணம் |
|---|---|---|---|
| பகுப்பாய்வு (4) | யோசனைகளுக்கிடையிலான தொடர்புகளை எழுதுதலும் பிரசினங்களைத் தீர்த்தலும் | பகுப்பாய்வு செய்தல் (Analyze) | தீர்வினை அல்லது பேறினைத் தெரிந்து கொள்ளும் நோக்கில் விபரமாக ஆய்வு செய்தல் |
| | | வித்தியாசப்படுத்துக / வகையிடுக (Differentiate) | சிலவற்றை வேறுபடுத்துகின்ற வித்தியாசங்களைக் காட்டுதல் / வகைப்படுத்தல் |
| | | கலந்தாய்வு செய்க / ஆராய்க (Discuss) | முடிவொன்றை அடையும் நோக்கில் விவாதம் மூலம் விபரமாகப் பரீட்சித்தல் |
| | | ஒப்பிடுக (Compare) | ஒற்றுமைகளை அறிவதற்காக ஆய்வுசெய்தல் |
| | | வேறுபடுத்துக (Contrast) | வேறுபாடுகளைக் காட்டுவதற்காகப் ஆய்வு செய்தல் |
| | | சுருக்கமாகக் குறிப்பிடுக (Outline) | முக்கிய அம்சங்களின் தொகுப்பினைத் தருதல் |
| | | தொடர்பாடுக (Communicate) | தகவல்களைப் பங்கிடுதல் அல்லது பகிர்தல் |
| பிரயோகம் (3) | புதிய சூழ்நிலைகளில் அறிவைப் பயன்படுத்தலும் பின்பற்றுதலும் | பிரயோகிக்குக (Apply) | நடைமுறைப் பயன்பாட்டிற்குக் கொண்டுவருதல் |
| | | கணிக்குக / கணிப்பிடுக (Calculate) | கணிதரீதியாக கணிப்பீட்டினை மேற்கொள்ளல் |
| | | எடுத்துக்காட்டுடன் விபரிக்குக (Demonstrate) | உதாரணங்களுடன் நிறுவுதல் அல்லது வெளிக்காட்டல் |
| | | தயாரிக்குக (Prepare) | கேட்கப்பட்ட விடயத்தை உரிய முறையில் வெளிக்காட்டல் |
| | | தீர்க்குக (Solve) | கணிப்பீடு அல்லது விளக்கங்கள் மூலம் தீர்வு காணல் |
| | | மதிப்பிடுக (Assess) | பெறுமதி, தன்மை, இயலுமை அல்லது தரத்தினைத் தீர்மானித்தல் |
| | | வரைபுத்தாளில் வரைக (Graph) | வரைபடங்கள் மூலம் காட்டுதல் |
| | | கணக்கிணக்கம் செய்க / இணக்கம் செய்க (Reconcile) | வேறொன்றுடன் இணங்குதலை ஒப்புவித்தல் |
| முற்றடக்கம் (2) | யோசனைகள் மற்றும் தகவல்களை விபரித்தல் | பொருள் வரையறை செய்க / வரைவிலக்கணப்படுத்துக (Define) | சரியான தன்மை, நோக்கு அல்லது பொருளைத் தருதல் |
| | | விபரிக்குக (Explain) | உரிய விடயங்களைப் பயன்படுத்தி தெளிவான விவரணத்தை விபரமாகத் தெரிவித்தல் |
| | | விளக்குக (Describe) | பிரதான அம்சங்களை எழுதுதலும் தொடர்பாடுதலும் |
| | | பொருள் விளக்குக / கருத்துக் கூறுக (Interpret) | விளங்கக்கூடிய வகையில் தெளிவுபடுத்துதல் |
| | | ஏற்பிசைவு செய்தல் (Recognize) | அறிவை அல்லது அது சார்ந்த அனுபவத்தைக் கொண்டு செல்லுபடித் தன்மையை அல்லது அதன் இயலாமையைக் காட்டுதல் |
| அறிவு (1) | விடயங்களை ஞாபகப்படுத்தலும் அடிப்படை எண்ணக்கருக்களும் | நிரற்படுத்துக / பட்டியலிடுக (List) | தொடர்புபட்ட உருப்படிகளை ஒன்றன்கீழ் ஒன்றாக எழுதுதல் |

# இலங்கை கணக்கீட்டு தொழில்நுட்பவியலாளர் கழகம்

## பாடத்திட்டம் 2020

## பரிந்துரைக்கப்பட்ட விடைகள்

## மட்டம் II

## 201 – உயர் நிதிக் கணக்கீடும் கிரயவியலும்

## [AFC]

கல்வி மற்றும் பயிற்சிப் பிரிவின் வெளியீடு

**நோக்கச் சோதனை வினாக்கள் (OTQ)**
12 கட்டாய வினாக்கள்
(மொத்தம் 25 புள்ளிகள்)

**பகுதி A**

***வினா 01 இற்கான விடைகள்***

1.1) 2 1.2) 4 1.3) 3 1.4) 1 1.5) 3

1.6

| | நிதிக் கணக்கீடு | கிரயக் கணக்கீடு |
|---|---|---|
| காலப் பகுதி | கொடுக்கல் வாங்கல்கள் குறிப்பிட்ட காலப்பகுதி ஒன்றுக்காக பதிவு செய்யப்பட்டு கூற்றுக்கள் தயாரிக்கப்படுகின்றன. | கொடுக்கல் வாங்கல்கள் கிரய அலகு / கிரய உருப்படி ஒன்றுடன் இனங்காணப்படுகின்றன. |
| ஊடுசெயல்களின் உள்ளடக்கம் | இது முழுமையான வியாபாரத்தின் ஊடுசெயல்களையும் உள்ளடக்குகின்றது. | இது ஊடுசெயல்களின் ஒரு பகுதியை மட்டும் உள்ளடக்குகிறது. |
| நோக்கம் | இது வியாபாரத்தின் செயற்பாட்டுப் பெறுபேறுகளையும் நிதி நிலையினையும் வெளிப்படுத்தத் தயாரிக்கப்படுகிறது. | இது சரியான திட்டமிடல், கட்டுப்பாடு மற்றும் தீர்மானமெடுத்தலை மேற்கொள்ள முகாமைக்கு உதவுவதை நோக்காகக் கொண்டுள்ளது. |
| செலவுகளின் பகுப்பாய்வு | இது தொழிற்பாடுகளின் அடிப்படையில் செலவினங்களைப் பகுப்பாய்வு செய்கிறது. | இது வெவ்வேறுபட்ட அடிப்படைகளின்மீது செலவினங்களைப் பகுப்பாய்வு செய்கிறது. |
| வினைத்திறன் | வியாபாரத்தின் ஒட்டுமொத்தப் பெறுபேறுகளும் நிதி நிலைமையும் நிதிக் கூற்றுக்களால் வெளியிடப்படுகின்றன. | இது ஒவ்வொரு பிரிவினதும் இலாபத்தன்மை, கிரய அலகு, வேலை அல்லது செயன்முறையைப் பகுப்பாய்வு செய்கிறது. |
| பொருள் கட்டுப்பாடு | இது பொருள் கையாளுகையின் வினைத்திறன் / வினைத்திறனின்மை பற்றி எந்தவொன்றையும் தெரிவிக்காது. | இது கொள்வனவுகள், களஞ்சியப்படுத்தல், வழங்கல்கள் போன்றவற்றிற்காகக் குறித்துரைக்கப்பட்ட நடைமுறைகளால் சிறந்த தொக்குக் கட்டுப்பாட்டு முறைமையொன்றை வழங்குகிறது. |
| முறைமையின் சுயாதீனத்தன்மை | இது கிரயக் கணக்கீட்டில் சுயாதீனமானது. | இது நிதிக் கணக்கீட்டுத் தரவுகளில் தங்கியிருக்கிறது. |
| பெறுபேறுகளின் இணக்கம் | எந்தவித இணக்கங்களும் இதற்குத் தேவைப்படுவதில்லை. | நிதிப் பதிவுகளுடனான அதன் இலாபத்தின் இணக்கத்தை இது எதிர்பார்க்கிறது. |
| சேதாரம் | அவ்வாறான வகைகள் ஏதும் இல்லை. | சேதாரங்கள் அல்லது நட்டங்கள் இனங்காணப்பட்டு சாதாரண மற்றும் அசாதாரணம் என்று வகைப்படுத்தப்படும். |
| ஊடுசெயல்கள் | இது உண்மையான விடயங்களுடனும் எண் பெறுமானங்களுடனும் தொடர்புடையது. | இது பகுதியளவில் உண்மையான விடயங்கள் மற்றும் எண் பெறுமானங்களுடனும் |

| | | |
|---|---|---|
| | | பகுதியளவில் மதிப்பீடுகளுடனும் தொடர்புபட்டது. |
| இருப்பு மதிப்பீடு | இருப்புகளானவை "கிரய விலை" அல்லது "நிகர தேறத்தக்க பெறுமதி" ஆகிய இரண்டில் எது குறைந்ததோ அதில் மதிப்பிடப்படுகிறது. | இருப்புகளானவை கிரயத்தில் மதிப்பிடப்படும். |
| சட்டத் தேவைப்பாடுகள் | வேறுபட்ட சட்டவாக்கங்களுக்கு இணங்குதல் வேண்டும். | இப்பதிவுகள் பொதுவாக முகாமையின் தேவைப்பாடுகளைப் பூர்த்தி செய்யப் பேணப்படுகிறது. |

*(ஏதாவது 2 வேறுபாடுகளுக்கு 2 புள்ளிகள்)*

1.7

- மூலப்பொருள் வழங்கலானது சரியான நேரத்தில் சரியான அளவு மற்றும் தரத்தில் வழங்கப்படுவத உறுதிப்படுத்துவதற்கு
- வழங்குநர் ஒருவரைத் தெரிவு செய்யும்போது விலை, தரம் மற்றும் விநியோகம் ஆகியவற்றுக்கிடையில் ஒரு சமநிலையைப் பேணுவதற்கு
- இருப்புகள் மீதான மூலதனத்தின் முதலீடு தடைகளின்றி இருப்பதை உறுதிப்படுத்துவதற்கு (மேலதிகமாக இருப்பிலிடுவதைத் தவிர்த்தல்)
- அசாதாரண சேதாரங்கள், கசிவுகள் போன்றவற்றைத் தவிர்ப்பதற்கு
- பொருட்கள் வழக்கிழந்து போதலைத் தவிர்ப்பதற்கு
- பொருட்கள் தொடர்பான தகவல்களை முகாமைக்கு வழங்குவதற்கு
- சரியான களஞ்சியப்படுத்தல் மற்றும் பயன்பாட்டினை உறுதிப்படுத்துவதற்கு
- இருப்புச் சரிபார்த்தலுக்கு வசதியளிப்பதற்கு
- சீரான முறையில் பௌதிக ரீதியாக இருப்பு மட்டங்களை செவ்வை பார்ப்பதற்கு

*(ஏதாவது 2 விடயங்களுக்கு 2 புள்ளிகள்)*

1.8

- வெளியீட்டை அதிகரிக்க வினைத்திறனான பணியாளர்களுக்கு எவ்வித ஊக்குவிப்புகளும் இன்மை
- ஒரே தரத்திலுள்ள சகல ஊழியர்களுக்கும் அவர்களது செயற்றிறனைக் கருத்திற் கொள்ளாது ஒரே வீதத்தில் கொடுப்பனவு செலுத்தப்படுதல்
- நெருங்கிய மேற்பார்வை கட்டாயமாக இருப்பதன் காரணமாக மேற்பார்வைக் கிரயம் அதிகமாக இருத்தல்
- வினைத்திறன்மிக்க பணியாளர்களும் வினைத்திறனற்ற பணியாளர்களும் ஒரே அளவிலான கூலியைப் பெறல். அதாவது முயற்சிகளும் வெகுமதிகளும் பொருத்தமானதாக இல்லை.
- ஒரே அளவான கூலியைச் சகல ஊழியர்களுக்கும் வழங்குவது சிறந்த ஊழியர்களுக்கு வெறுப்பை ஏற்படுத்தும்.
- ஓர் அலகிற்கான ஊழியக் கிரயத்தை மதிப்பிடுவது கடினம்.
- மேலதிக நேரக் கொடுப்பனவுகளைப் பெற்றுக்கொள்வதற்காக ஊழியர்கள் மெதுவாக வேலை செய்தல்
- உற்பத்தியின்போது தரத்திலும்பார்க்க எண்ணிக்கைக்கு முக்கியத்துவம் வழங்கப்படுகிறது. இம்முறையானது பொருத்தமற்றது.

*(ஏதாவது 2 விடயங்களுக்கு – 2 புள்ளிகள்)*

1.9 (a) சகல பங்காளரது சம்மதமும் பெறப்பட வேண்டும் *(01 புள்ளி)*

(b) தீர்மானம் ஏகமனதாக இருக்க வேண்டும். *(01 புள்ளி)*

1.10

- பூச்சிய செயலிழப்புகள்
- 100% உரிய நேர விநியோகம்
- பெறுமதி சேராத நடவடிக்கைகளைத் தவிர்த்தல்
- பூச்சிய குறைபாடுகள்
- இருப்புகளுக்குக் குறைந்த முதலீடு தேவைப்படல்
- இட சேமிப்பு
- உயர் தரம் மற்றும் சிறந்த வெளியீட்டின் மூலம் வாடிக்கையாளர் திருப்தியை அதிகரித்தல்

***(ஏதாவது 2 விடயங்களுக்கு – 2 புள்ளிகள்)***

1.11

| | | |
|---|---|---|
| காணி மற்றும் கட்டடம் (வ) | 6,000 | |
| மோட்டார் வாகனம் (செ) | | 400 |
| மூலதனக் கணக்குகள் A (செ) | | 2,800 |
| B (செ) | | 1,680 |
| C (செ) | | 1,120 |

***(02 Marks)***

1.12

| | |
|---|---|
| நிதிக் கணக்குகளின்படியான இலாபம் | 632,325 |
| கூட்டு: பணிப்பாளர் கட்டணம் | 250,000 |
| | 882,325 |
| | |
| கழி: ஆரம்ப இருப்பு | (48,000) |
| இறுதி இருப்பு | (40,000) |
| கிரயக் கணக்குகளின்படியான இலாபம் | 794,325 |

***(03 Marks)***
***(Total 25 Marks)***

## *பகுதி A முடிவு*

**ஐந்து (05) கட்டாய வினாக்கள்**
(மொத்தம் 50 புள்ளிகள்)

**பகுதி B**

## *வினா 02 இற்கான விடைகள்*

| | |
|---|---|
| **அலகு 5** | **- கிரயக் கணக்கீடு** |
| கற்றற் பேறுகள் | - மூலப்பொருள் கட்டுப்பாட்டில் பயன்படுத்தப்படும் நடைமுறைகளை விபரித்தலும் தொக்குகளுடன் தொடர்புடைய கிரயத்தைக் கணிப்பிடுதலும்<br>- ஊழியர் தொடர்பாகப் பயன்படுத்தப்படும் நடைமுறைகளை இனங்காணலும் ஊழியக் கிரயத்தைக் கணிப்பிடுதலும் |

**(a)** ரூபா 000’

| திகதி | பெறுவனவு | | | விநியோகம் | | | மீதி | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | அலகு | அலகு விலை (ரூபா) | பெறுமதி (ரூபா) | அலகு | அலகு விலை (ரூபா) | பெறுமதி (ரூபா) | அலகு | அலகு விலை (ரூபா) | பெறுமதி (ரூபா) |
| 01/12 | | | | | | | 100 | 20 | 2,000 |
| 03/12 | 250 | 30 | 7,500 | | | | 350 | 27 | 9,500 |
| 05/12 | 200 | 32 | 6,400 | | | | 550 | 28.9 | 15,900 |
| 10/12 | | | | 150 | 28.9 | 4,335 | 400 | 28.9 | 11,565 |
| 15/12 | | | | 200 | 28.9 | 5,780 | 200 | 28.9 | 5,785 |
| 21/12 | 300 | 28 | 8,400 | | | | 500 | 28.37 | 14,185 |
| | | | | | | | | | |
| 25/12 | 250 | 24 | 6,000 | | | | 750 | 26.9 | 20,185 |
| 30/12 | | | | 450 | 26.9 | 12105 | 300 | 26.9 | 8,080 |

(a) ரூபா 8,080,000 ***(03 Marks)***
(b) ரூபா 22,220,000 ***(02 Marks)***

**(B)** **(ரூபா)**

| பெயர் | அடிப்படைச் சம்பளம் | சேர்ப்பனவுகள் | | | மொத்தச் சம்பளம் | கழிப்பனவுகள் | | நிகரச் சம்பளம் | EPF 15% | ETF 3% |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | வாழ்க்கைச் செலவுப் படிகள் | போக்குவரத்துப் படிகள் | மேலதிக நேரப் படிகள் | | அங்கத்துவக் கட்டணம் | EPF 10% | | | |
| நிமல் | 2,560 | 4,000 | | | 6,560 | 500 | 256 | 5,804 | 384 | 76.8 |
| நந்தசேன | 800 | 4,000 | | | 4,800 | 500 | 80 | 4,220 | 120 | 24 |
| அமரசிங்க | 1,280 | 4,000 | | 432 | 5,712 | 500 | 128 | 5,084 | 192 | 38.4 |
| அமல் | 3,200 | 4,000 | 10,000 | - | 17,200 | 500 | 320 | 16,380 | 480 | 96 |
| **மொத்தம்** | 7,840 | 16,000 | 10,000 | 432 | 34,272 | 2,000 | 784 | 31,488 | 1,176 | 235.2 |

***(05 புள்ளிகள்)***
***(மொத்தம் – 10 புள்ளிகள்)***

## *வினா 03 இற்கான விடைகள்*

**அலகு 5** **- கிரயக் கணக்கீடு**

கற்றற் பேறுகள் - மேந்தலைகளின் பகிர்வை / உறிஞ்சலை மதிப்பிடல்

**(a)**

மேந்தலை பகுப்பாய்வுத் தாள் (ரூபா)

| கிரய உருப்படி | பிரிப்பின் அடிப்படை | மொத்த மேந்தலைக் கிரயம் | உற்பத்திப் பிரிவுகள் | | சேவைப் பிரிவு |
|---|---|---|---|---|---|
| | | | செயன்முறை | பொதியிடல் | |
| நேரில் பொருள் | நேர்கோட்டு அடிப்படை | 850,000 | 500,000 | 350,000 | - |
| நேரில் கூலி | நேர்கோட்டு அடிப்படை | 870,000 | 450,000 | 250,000 | 170,000 |
| கட்டடக் காப்புறுதி | கட்டடக் கிரயம் 5:3:2 | 1,250,000 | 625,000 | 375,000 | 250,000 |
| இயந்திரத் தேய்மானம் | இயந்திரக் கிரயம் 2:1 | 960,000 | 640,000 | 320,000 | - |
| கட்டடத் தேய்மானம் | கட்டடக் கிரயம் 5:3:2 | 1,080,000 | 540,000 | 324,000 | 216,000 |
| | | | 2,755,000 | 1,619,000 | 636,000 |
| சேவைப் பிரிவுக் கிரயப் பகிர்வு | கோரிக்கைகளின் எண்ணிக்கை 2:1 | | 424,000 | 212,000 | (636,000) |
| உற்பத்திப் பிரிவின் மொத்த மேந்தலைக் கிரயம் | | | 3,179,000 | 1,831,000 | - |

செய்முறை

கட்டடக் காப்புறுதி

செயன்முறை - ரூபா $1,250,000 \times \frac{5}{10} =$ ரூபா 625,000

பொதியிடல் - ரூபா $1,250,000 \times \frac{3}{10} =$ ரூபா 375,000

களஞ்சியம் - ரூபா $1,250,000 \times \frac{2}{10} =$ ரூபா 250,000

இயந்திரத் தேய்மானம்

செயன்முறை - ரூபா $960,000 \times \frac{2}{3} =$ ரூபா 640,000

பொதியிடல் - ரூபா $960,000 \times \frac{1}{3} =$ ரூபா 320,000

கட்டடத் தேய்மானம்

செயன்முறை - ரூபா $1,080,000 \times \frac{5}{10} =$ ரூபா 540,000

பொதியிடல் - ரூபா $1,080,000 \times \frac{3}{10} =$ ரூபா 324,000

களஞ்சியம் - ரூபா $1,080,000 \times \frac{2}{10} =$ ரூபா 216,000

**(b)**

செயன்முறைப் பிரிவின் அலகொன்றிற்கான உறிஞ்சல் வீதம் = $\frac{\text{செயன்முறைப் பிரிவின் மொத்த மேந்தலைக் கிரயம்}}{\text{செயன்முறைப் பிரிவின் இயந்திர மணித்தியாலம்}}$

$= \frac{3,179,000}{63,300}$

= ரூபா 50.22

## *வினா 04 இற்கான விடைகள்*

**அலகு 3 – பங்குடமைக்கான நிதிக் கூற்றுக்கள்**

கற்றற் பேறுகள் - பங்குடமையொன்றிற்கான நிதிக் கூற்றுக்களைத் தயாரித்தல்

இலாப மற்றும் நட்டப் பகிர்வுக் கணக்கு ரூபா 000’

| | | |
|---|---|---|
| நிகர இலாபம் (தொழிற்பாடு) | | 1,320 |
| மூலதனம் மீதான வட்டி | | |
| G | 150 | |
| N | 100 | |
| Y | 50 | (300) |
| சம்பளம் | | |
| G | 120 | |
| N | 180 | (300) |
| இலாபப் பங்கு | | 720 |
| G | 360 | |
| N | 240 | |
| Y | 120 | (720) |
| | | - |

செய்முறை

வருமானக் கூற்று

| | | |
|---|---|---|
| விற்பனை | | 6,800 |
| விற்பனைக் கிரயம் | | (2,985) |
| மொத்த இலாபம் | | 3,815 |
| விநியோகச் செலவினம் | (1,800) | |
| நிருவாகச் செலவினம் | (470) | |
| நிதிச் செலவினம் | (225) | (2,495) |
| நிகர இலாபம் | | 1,320 |

***(03 புள்ளிகள்)***

**(b)**

மூலதனக் கணக்கு (ரூபா '000)

| | கங்கா | நாதி | யமுனா | | கங்கா | நாதி | யமுனா |
|---|---|---|---|---|---|---|---|
| நன்மதிப்பு | 900 | 900 | - | மீ/கொ/வ | 1,500 | 1,000 | 500 |
| கடன் | | | 1,195 | நன்மதிப்பு | 900 | 600 | 300 |
| | | | | நடைமுறை | | | 395 |
| மீ/கொ/வ | 1,500 | 700 | | | | | |
| | 2,400 | 1,600 | 1,195 | | 2,400 | 1,600 | 1,195 |

***(03 புள்ளிகள்)***

**(c)**

நடைமுறைக் கணக்கு (ரூபா '000)

| | கங்கா | நாதி | யமுனா | | கங்கா | நாதி | யமுனா |
|---|---|---|---|---|---|---|---|
| மீ/கொ/வ | | 100 | | மீ/கொ/வ | 300 | | 285 |
| எடுப்பனவுகள் | 120 | 125 | 60 | சம்பளம் | 120 | 180 | - |
| கடன் | | | 395 | மூலதனம் மீதான வட்டி | 150 | 100 | 50 |
| மீ/கொ/செ | 810 | 295 | | இலாபப் பங்குகள் | 360 | 240 | 120 |
| | 930 | 420 | 455 | | 930 | 420 | 455 |

***(04 புள்ளிகள்)***
***(மொத்தம் 10 புள்ளிகள்)***

## *வினா 05 இற்கான விடைகள்*

**அலகு 4 – பூரணமற்ற பதிவுகளைப் பயன்படுத்தி நிதிக் கூற்றுக்களைத் தயாரித்தலும் இலாப நோக்கற்ற நிறுவனங்களும்**

கற்றற் பேறுகள் - இலாப நோக்கற்ற நிறுவனமொன்றிற்கான ஒரு தொகுதி நிதிக் கூற்றுக்களைத் தயாரித்தல்

**(a)**

அங்கத்துவக் கணக்கு ரூபா 000'

| | | | |
|---|---|---|---|
| மீ/கொ/வ | 300 | மீ/கொ/வ | 100 |
| வருமானம் | 1,000 | காசு | 1,200 |
| மீ/கொ/வ | 100 | மீ/கொ/வ | 100 |
| | 1,400 | | 1,400 |

***(03 புள்ளிகள்)***

**(b)**

**ஸ்பைஸி விளையாட்டுக் கழகம்**
**கொள்ளல் மற்றும் கொடுத்தல் கணக்கு** ரூபா 000'

| | பெறுவனவுகள் ரூபா | | கொடுப்பனவுகள் ரூபா |
|---|---|---|---|
| மீ/கொ/வ | 175 | விளையாட்டு உபகரணம் | 1,800 |
| அங்கத்துவச் சந்தா | 1,200 | மின்சாரம் | 600 |
| நன்கொடை | 2,750 | அச்சிடலும் காகிதாதிகளும் | 200 |
| | | மைதான பராமரிப்பு | 150 |
| | | சம்பளங்கள் | 750 |
| | | விளம்பரம் | 100 |
| | | மீ/கொ/வ | 525 |
| | 4,125 | | 4,125 |

***(03 புள்ளிகள்)***

**(c)**

ஸ்பைசி விளையாட்டுக் கழகம்
வருமான, செலவினக் கணக்கு (ரூபா 000')

| | | |
|---|---|---|
| <u>வருமானம்</u> | | |
| அங்கத்துவச் சந்தா | 1,000 | |
| நன்கொடை | 2,750 | 3,750 |
| <u>செலவினம்</u> | | |
| அச்சிடலும் காகிதாதிகளும் | 200 | |
| மைதானப் பராமரிப்பு | 150 | |
| சம்பளங்கள் | 750 | |
| விளம்பரப்படுத்தல் | 100 | |
| தேய்மானம் - விளையாட்டு உபகரணம் | 1,300 | |
| - கட்டடம் | 400 | |
| மின்சாரம் (w - 01) | 400 | 3,300 |
| ஆண்டிற்கான மிகை | | 450 |

***(04 புள்ளிகள்)***

W – 01

மின்சாரம்

| | | | |
|---|---|---|---|
| | | மீ/கொ/வ | 400 |
| காசு | 600 | | |
| | | இலாப, நட்டம் | 400 |
| மீ/கொ/செ | 200 | | |
| | 8,000 | | 8,000 |

*(மொத்தம் 10 புள்ளிகள்)*

## *வினா 06 இற்கான விடைகள்* *பகுதி C*

**அலகு 4** **- பூரணமற்ற பதிவுகளைக் கொண்டு நிதிக் கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் இலாப நோக்கற்ற நிறுவனங்கள்**

கற்றற் பேறுகள் - பூரணமற்ற பதிவுகளின் அடிப்படையில் நிதிக் கூற்றுக்களைத் தயாரித்தல்

**மரியோ வியாபாரம்**

**2019 டிசெம்பர் 31 இல் முடிவடைந்த காலப்பகுதிக்கான வருமானக் கூற்று**

| | | |
|---|---|---|
| விற்பனைகள் (2400 + 30) | | 2,430 |
| கொள்வனவுகள் (w – 01) | 1,475 | |
| இறுதி இருப்பு | (425) | |
| விற்பனைக் கிரயம் | | 1,050 |
| மொத்த இலாபம் | | 1,380 |
| <u>விநியோகச் செலவுகள்</u> | | |
| தேய்மானம் – மோட்டார் வாகனங்கள் (1200×20%×1/12) | 20 | (20) |
| <u>நிருவாகச் செலவுகள்</u> | | |
| வாடகை (25,000 × 3) | 75 | |
| மின்சாரம் | 190 | |
| சம்பளங்கள் | 650 | (915) |
| <u>நிதிச் செலவுகள்</u> | | |
| வங்கிக் கட்டணம் | 4.5 | |
| கடன் வட்டி (750 × 12%×%1/12) | 7.5 | (12) |
| நிகர இலாபம் | | 433 |

W – 01

வியாபார சென்மதிகள்

| | | | |
|---|---|---|---|
| காசு | 1 ,200 | கொள்வனவு | 1,475 |
| மீ/கொ/வ | 275 | | |
| | 1,475 | | 1,475 |

*(10 புள்ளிகள்)*

## *பகுதி B முடிவு*

ஒரு (01) கட்டாய வினா

**பகுதி C**

***வினா 07 இற்கான விடைகள்***

**அலகு 1 – நிதிக் கூற்றுக்களின் மூலகங்களும் பகுதிகளும் மற்றும் நிதிக் கூற்றுகளுக்கான செம்மையாக்கங்களும்**

**அலகு 2 – பரிப்பு வரையறுக்கப்பட்ட கம்பனியொன்றிற்கான நிதிக் கூற்றுகள்**

கற்றற் பேறுகள் - SLASs இன்படி கணக்கீட்டு செய்கைகள் வெளிப்படுத்தல் தேவைப்பாடுகளை விவரித்தல்
- பரிப்பு வரையறுக்கப்பட்ட கம்பனி ஒன்றிற்கான நிதிக் கூற்றுகளின் தொகுதி ஒன்றைத் தயாரித்தல்

வரையறுக்கப்பட்ட SITJ (தனியார்) கம்பனி
2019 மார்ச் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான
முற்றடக்க வருமானக் கூற்று
(ரூபா ’000)

| | | |
|---|---|---|
| விற்பனைகள் (25,375 + 15,000 – 2,800) | | 37,575 |
| (-) விற்பனைக் கிரயம் – W - 01 | | (16,900) |
| மொத்த இலாபம் | | 20,675 |
| (+) ஏனைய வருமானம் (2,000 + 700) – w-03 | | 2,700 |
| | | 23,375 |
| (-) செலவுகள் | | |
| விநியோகம் – W – 04 | 3,416.25 | |
| நிருவாகம் – W – 05 | 3,645 | |
| நிதி | 40 | (7,101.25) |
| வரிக்கு முன்னரான இலாபம் | | 16,273.75 |
| (-) வருமான வரி | | (250) |
| ஆண்டிற்கான இலாபம் | | 16,023.75 |

***(12 Marks)***

வரையறுக்கப்பட்ட SITJ (தனியார்) கம்பனி
2019 மார்ச் 31 இலான
நிதி நிலைக் கூற்று

(ரூபா '000)

| | | |
|---|---|---|
| **<u>நடைமுறையல்லாச் சொத்துக்கள்</u>** | | |
| PPE – W - 02 | | 12,187.50 |
| | | |
| **<u>நடைமுறைச் சொத்துக்கள்</u>** | | |
| இருப்பு | 2 300 | |
| வியாபார வருமதிகள் | 12 000 | |
| (-) ஐயக்கடன் ஏற்பாடு | (600) | |
| காசும் காசுச் சமானங்களும் | <u>21,350</u> | <u>35,050</u> |
| **மொத்தச் சொத்துக்கள்** | | **<u>47,237.50</u>** |
| **<u>உரிமையாண்மையும் பரிப்புக்களும்</u>** | | |
| குறிப்பிடு மூலதனம் (சாதாரண பங்குகள்) | 15,000 | |
| கைக்கொள் இலாபம் (5000 – 1000 + 16,023.75) | 20,023.75 | |
| பொது ஒதுக்கம் | 1,000 | 36,023.75 |
| **<u>நடைமுறையல்லாச் சொத்துக்கள்</u>** | | |
| வங்கிக் கடன் | | 4,000 |
| **<u>நடைமுறைச் சொத்துக்கள்</u>** | | |
| அட்டுறு மின்சாரம் | 45 | |
| செலுத்த வேண்டிய வருமான வரி | 150 | |
| உத்தரவாத ஏற்பாடு 3,7575×5% | 1 878.75 | |
| அட்டுறு வட்டிகள் | 40 | |
| செலுத்த வேண்டிய வாடகை | 100 | |
| வியாபார சென்மதிகள் | <u>5,000</u> | <u>7,213.75</u> |
| **மொத்த உரிமையாண்மையும் பரிப்புகளும்** | | **<u>47,237.50</u>** |

***(13 புள்ளிகள்)***

W - 01
விற்பனைக் கிரயம்

| | |
|---|---|
| இருப்பு (3,500 + 1,200) | 4,700 |
| கொள்வனவுகள் (8,500 + 6,000) | 14,500 |
| | 19,200 |
| இறுதி இருப்பு (2,000 + 300) | (2,300) |
| | 16,900 |

W – 02 – ஆதனம், பொறி மற்றும் உபகரணம்

| | காணி | கட்டடம் | மோட்டார் வாகனங்கள் | அலுவலக உபகரணங்கள் | மொத்தம் |
|---|---|---|---|---|---|
| 2018/04/01 இல் | 9,000 | 6,000 | 6,000 | 1,000 | 22,000 |
| விற்பனைகள் | | | (3,500) | | (3,500) |
| 2019/03/31 இல் | 9,000 | 6,000 | 2,500 | 1,000 | 18,500 |
| தேய்மானம் | | | | | |
| 2018/04/01 இல் | - | 4,000 | 2,000 | 500 | 6,500 |
| விற்பனை | | | (1,400) | - | (1,400) |
| தேய்மானம் | - | 600 | 512.5 | 100 | 1,212.5 |
| 2019/03/31 இல் | - | 4,600 | 1,112.5 | 600 | 6,312.5 |
| முன்கொணரற் பெறுமதி | | | | | 12,187.5 |

W – 03

மோட்டார் வாகன விற்பனைக் கணக்கு

| | | | |
|---|---|---|---|
| கிரயம் | 3,500 | காசு | 2,800 |
| இலாபம் | 700 | தேய்மானம் | 1,400 |
| | 4,200 | | 4,200 |

விற்பனை மீதான தேய்மானம் – $3500 \times 10\% \times 4 = 1,400$

தேய்மானம் – மோட்டார் வாகனம்

விற்பனை – $3500 \times 10\% \times 9/12 = 262.5$

மீதி – $2500 \times 10\% = 250$

512.5

W - 04

விநியோகச் செலவினம்

| | |
|---|---|
| விற்பனைப் பணிசை | 450 |
| உத்தரவாத ஏற்பாடு | 1,878.75 |
| அறவிடமுடியாக் கடன் | 160 |
| அறவிடமுடியாக் கடன் ஏற்பாடு | 40 |
| விளம்பரப்படுத்தல் | 375 |
| மோட்டார் வாகன தேய்மானம் | 512.5 |
| | 3,416.25 |

W - 05

நிருவாகச் செலவினம்

| | |
|---|---|
| மின்சாரம் (250+45) | 295 |
| வாடகை | 600 |
| சம்பளங்களும் கூலிகளும் | 1,800 |
| தெலைபேசி | 250 |
| தேய்மானம் - கட்டடம் | 600 |
| - அலுவலக உபகரணம் | 100 |
| | 3,645 |

***(மொத்தம் 25 புள்ளிகள்)***

## *பகுதி C முடிவு*